யாழ்ப்பாணம்
... நூலகம்,

# நோர்வே நாட்டு தூதுக்குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும் தொடரும் என எதிர்பார்க்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் தற்பொழுது அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு சம்பந்தமாகவும் நோர்வே நாட்டு தூதுக்குழு சிறிலங்கா அரசாங்கத்துடன பேசவுள்ளது.

இந்த தூதுக்குழு அடுத்த வாரம் இலஙகைககு வருகை தரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

நோர்வே நாட்டு தூதுக்குழு சிறிலங்காவில் நான்கு நாட்கள் தங்கிநின்று பேச்சு

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 27 இதழ் 29
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-3-1995

## "சமாதான முயற்சிகளை தூதுக் குழு அறியும்"

[கொழும்பு]
சிறிலங்கா அரசாங்கத்தின் முற்றுமுழுதான சமாதான முயற்சிகளையும் தமது தூதுக்குழு அறியும் என நோர்வே தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கவுள்ள நோர்வே அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அஸ்கின் மத்தீஸன் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக தூதுக்குழு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அவரிடம் கேட்கப்பட்டபோது சமாதானத்தையே விரும்புகிற இலங்கை மக்களின் பக்கம் நின்று தம்மால் நல்ல முயற்சிகள் மேற்கொள்ள முடியும்

(4ம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் தடையை நீக்கி உண்ணாவிரதிகளின் உயிரை காப்பாற்றுமாறு கோரிக்கை

## 23 அரச எம்.பிக்கள் அரசிடம் வலியுறுத்து

[கொழும்பு]
வடபகுதி மீதான எரிபொருள் தடையை நீக்கி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் 15 பொலிசாரினதும், ஒரு இராணுவசிப்பாயினதும் உயிரைக் காப்பாற்றுமாறு 23 அரச தரப்பு எம். பிக்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

வடபகுதி மீதான எரிபொருள் தடையை நீக்கி வடபகுதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை தீர்க்கக் கோரி இரத்தினபுரி மாவட்ட பொ, ஐ. மு. எம். பி வாசுதேவ நாணயக்கார தலைமையில் அரசாங்கத்தைச் சேர்ந்த 23 எம்.பிக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். எரிபொருள் தடையை நீக்குவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் 15 பொலிசாரினதும் ஒரு இரா

(4ம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை, மகசீன் சிறைகள் மீது தாக்குதல்!

(கொழும்பு)
கடந்த வியாழன் மாலை 5 மணியளவில் வெலிக்கடை மகசீன் சிறைச்சாலை 50 பேரடங்கிய இனந்தெரியாத கோஷ்டியொன்றினால் தாக்குதலுக்குள்ளானது.

கற்களாலும், தடிகளினாலும் இந்தக் கோஷ்டி சிறைச்சாலையைத் தாக்கியதாகவும் சம்பவ இடத்திற்கு பொரளை பொலிசார் விரைந்து வந்தபோதும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இதனையடுத்து கொழும்

(4ம் பக்கம பார்க்க)

## சிறை உத்தியோகத்தர் தொடர்ந்து வேலைநிறுத்தம்

[கொழும்பு]
பாதாள உலக குற்றவாளிகளின் ஆதிக்கம் சிறைச்சாலைகளில் மேலோங்கி இருப்பதால் இந்தநிலை முற்றாகமாறும்வரை தாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை மாலை கொழும்பு கம்பல்பூங்கா அருகில் வைத்து இரு சிறைக்காவலர்கள் தாக்கப்பட்டனர்.

இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகளின் பெற்றோர் கொழும்புக்கு படையெடுப்பு

[கொழும்பு]
யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருக்கும் போர்க்கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் கொழும்பில் கூடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போர்க்கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென சம்பந்தப்பட்ட பெற்றோரும் உறவினரும் கோரியுள்ளனர்.

எனினும் இப்போது கொழு

(4ம் பக்கம் பார்க்க)

## நோயுற்ற நிலையில் கைதிகள்

(யாழ்ப்பாணம்)
சாகும்வரையான உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிங்கள யுத்தக்கைதிகள் சிலர் நோயுற்று இருக்கின்றனர்.

சுனில் திஸநாயக்க என்ற சிறிலங்காபொலிஸ்கைதிகடும் காய்ச்சலுக்கு உள்ளாகி இருக்கிறார்.

மேலும் நான்கு பொலிசார் கடுமையான நோயுற்றுள்ளனர். இவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வைத்திய அதிகாரியும்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆலோசனைகளை தெரிவிக்கவில்லை

(கொழும்பு)
அதிகாரப் பரவலாக்கல் குறித்து, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விடுதலைப் புலிகள் எதுவித ஆலோசனைகளையும் தெரிவிக்கவில்லை என நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: அதிகாரப் பரவலாக்கல் குறித்து நாடாளுமன்றத் தெரிவுகுழுக் ஆராய்ந்து வருகிறது. ஏனையவை தொடர்பாக, இக்குழு ஏற்கனவே சில ஆலோசனைகளை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் 27ம் திகதி வரை இத்தெரிவுக் குழு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைச் சந்தித்து, அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு அறிந்துகொள்ளும் என்றார். (க-இ-சி)

## அகதிகளை திருப்பியனுப்ப பிரிட்டன் தீவிர முயற்சி

[லண்டன்]
பிரிட்டனில் உள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதில் பிரிட்டன் தீவிரமான நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்று தெரிவிசகபபடுகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## தொழில் வங்கி அலுவலகம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)
தொழில் வங்கி அலுவலகம் நேற்று காலை 9-00 மணியளவில் யாழ். மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு இ. திருமாறனால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்வி கற்று தொழிலற்று இருப்போருக்காக தமிழீழ நிர்வாக சேவையினரால் இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொழில் வங்கியில் பதிவுசெய்ய வருவோர்

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை தாமதப்படுத்த அரசு விரும்பவில்லையாம்

[கொழும்பு]
சமாதானப் பேச்சுவார்த்தைகளை தாமதப்படுத்துவதற்கு அரசு விரும்பவில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு ஸ்திரமான சூழ்நிலையில் கடமையாற்றவே இந்த அரசு ஆயத்தமாகவுள்ளது.

பதில் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோது அமைச்சர் ரத்வத்த மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலுள்ள கருத்துப் பரிமாற்றங்களை சீர்செய்யும் விதத்தில் அரசு விடுதலைப் புலிகளுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளது என்றார். இ-ரி

# ஆசிரியர் சம்பளம் நிலுவையுடன் கிடைக்கும்

(கொழும்பு)

ஆசிரியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளம், நிலுவையுடன் வழங்கப்படும் எனக் கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இச்சம்பள அதிகரிபினுல், 1 லட்சத்து 78 ஆசிரியர்கள் பயன் பெறவுள்ளனர் உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ், ஆசிரியர்கள், அதிபர்களுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசிலுக்காக 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். க-சி

# போரினுல் கிழக்கில் 69 கோயில்கள் சேதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தினுல், கிழக்கு மாகாணத்தில் 69 கோயில்கள் சேதமாக்கப்பட்டுள்ளனஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயில்களை மீண்டும் புனரமைப்பதற்கு, கலாசார அமைச்சும், புனருத்தாரண அமைச்சும் திட்டங்கள் வகுத்து வருவதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது. ம-இ

---

## வரி விளம்பரம்

**ஆங்கிலம் – 95**

O/L Distinction, Credit பெறுபேறுடைய 'ஆண்டு 9, 10) உட்பட ஆரம்பத்திலிருந்து ஆங்கில ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1411)

**உற்சவம்**

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ கைதடி-நாவற்குழி கள்ளித்திடற்பதி கல்யாண வேலவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் 9ம் திகதிஆரம்பமாகி தொடர்ந்து 18ம் திகதிவரை நடைபெறவுள்ளது. (ம)

**அன்பளிப்பு**

(கொழும்புத்துறை)

யாழ். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், பொன்னுலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள், பென்சில்கள் மற்றும் பல பாடசாலை உபகரணங்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (154)

---

## அமைச்சர்களின் பொழுதுபோக்கு படி நிறுத்தப்படும்

(கொழும்பு)

பிரதி அமைச்சர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் பொழுதுபோக்குப் படி 1,000 ரூபாவை நிறுத்துவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த அரசாங்கக் காலத்திலிருந்து ராஜாங்க அமைச்சர்கள், திட்ட அமைச்சர்கள் உட்படச் சகல அமைச்சர்களுக்கும் பொழுதுபோக்குப் படி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் படியைப் பெற்றுக் கொள்வதில்லை என்று அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர். ம-சி

## மோதல் தவர்ப்பை படையினர் மீறுகின்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சில பகுதிகளில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை, படையினர் மீறி வருவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அண்மைக் காலமாகப் பல இடங்களிலும் படையினர் சுற்றிவளைப்பு, சோதனைகளை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறைப் பொறுப்பாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கில் படையினர் மீண்டும் ஒரு போருக்குத் தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ம-சி

---

## யாழ். லீக்கின் புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் புதிய தலைவராக திரு. எஸ்- ரி. கணநாதன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

தலைவர் திரு எஸ். அன்ரனிம்பிள்ளை கிளிபேட் தலைமையில், சென்பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி லீக்கின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

செயலாளர்: அ, தேவராசா, தனுதிகாரி: பெ.யேக்கப் உபதலைவர்கள்: சி. தியாகராஜா, அன்ரனிப்பிள்ளை கிளிபேட், எஸ். ஜெயபாலசிங்கம், ஜி. எச் யோசப், செ. சண்முகதாசன், உபசெயலாளர்; ச. மரியாம்பிள்ளை. -வி

---

# ஒரு லட்சம் இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

[கொழும்பு]

இலங்கையில் இருந்து சுமார் ஒரு லட்சம் பேர், வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்காக அனுப்பப்பட உள்ளதாகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில்தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரச உயர் அதிகாரிகளுடன் கருத்தும் பரிமாற்றம் நடைபெற்றதாகவும் தெரிவிததார்.

அண்மைக் காலமாகப் பெருமளவு இலங்கையர், வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்று, பல நாடுகளுக்குச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது க-சி

---

ஊழியர் சேமலாப நிதியில்

# வீடமைப்புக்கு கடன் வழங்கமுடிவு

(கொழும்பு)

ஊழியா சேமலாப நிதி உறுப்பினர்களுக்கு சலுகை அடிப்படையில் வீடமைபபுக் கடன் வழங்க அரசாங்க அடமான முதலீட்டு வங்கி ஒழுங்குகளை மேற்கொணடுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியிலுள்ள பணத்தை பிணையாக வைத்து இந்த வீடமைப்புக் கடனை பெற்றுக்கொள்ளலாம். சேமலாப நிதியில் 75 சதவீதமான பணத்தை அங்கத்தவர்கள் கடனுக பெற்றுக்கொள்ளலாம்.

மாதாந்தவருமானம் 7,150 ரூபாவுக்கு குறைவாக உள்ள ஊழியருக்கு 17 சத வீத வட்டியில் இந்த கடன்கள் வழங்கப்படும். இதற்கு கூடுதலாக மாதவருமானம் பெறும்வோர 2.05 சத வீத வட்டியைச் செலுத்தவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்புவோர் அணமையிலுள்ள தொழில் செயலக அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அரசாங்க அடமான முதலீட்டு வங்கியில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

வீடுகள் நிர்மாணித்தல்' கொள்வனவு செய்தல், விஸ்தரித்தல் அல்லது திருத்திக்கட்டுவதற்கு கடன்கள் வழங்கப்படும். விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்ட 10 நாட்களுக்குள் கடன் தொகை வழங்கப்படும். -சி

---


ஓம்

ஸ்ரீ ஞானபைரவர் துணை

**உபநயன ப்ரம்மோபதேச விஞ்ஞாபனம்**

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பவ வருடம்
மாசி மாதம் 28ஆம் நாள்
[ 12 – 03 – 1995 ] ஞாயிற்றுக்கிழமை
புனர்பூச நட்சத்திரமும் ஏகாதசி திதியும் சித்தயோகமும்
கூடிய சுபதினத்தில்
காலை 9-25 மணி முதல் 10-20 மணி வரையுள்ள
இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்
எனது பௌத்திரனும்,
சிவஸ்ரீ சிவநாவுக்கரசுக்குருக்கள் கம்பதிகளின்
ஜ்யேஷ்ட குமாரனுமாகிய

★ சிரஞ்சீவி கிருஷ்ணசர்மாவிற்கு ★

கந்தரோடை வட்டாக்கை அம்மன் கோவிலில்
வைத்து
சௌள யக்ஞோபவீததாரண
★ உபநயன ப்ரம்மோபதேசம் ★
நடைபெற இருப்பதால்,
தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்கள் சகிதம்
வருகைதந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைககின்றோம்.
சுபமஸ்து
இங்ஙனம்

பிரம்மஸ்ரீ சே. சிவபாதவிருதஐயர் தம்பதிகள்
வட்டாக்கை அம்மன் கோவிலடி,
கந்தரோடை, சுன்னுகம்.

தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ சிவநாவுக்கரசுக்குருக்கள் தம்பதிகள்
( சிவமூர்த்திக்குருக்கள் )
பிரம்மஸ்ரீ சி. சிவயோகீஸ்வரசர்மா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ கா. சிவானந்தசர்மா தம்பதிகள்

(சி-1412)


---

# 75 வீதமான பொலிஸார் ஊழல் பேர்வழிகள் – ஜனதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளில் 75 வீதமானோர் ஊழல் பேர்வழிகள். இதனுல் இவர்கள் மேல உடனடி நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது

சிறிலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர் மத்தியில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உரையாற்றும போது ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு கூறினுர்.

ஜனதிபதி சந்திரிகா கடந்த ஆறு மாதங்களில் அரசு ஆற்றிய பணிகளை எடுத்துரைத்தார்.

17 வருடம் துஷ்பிரயோகம் செய்த கடந்த அரசின் தவறுன ஆட்சி முறையை ஒரு சில மாதங்களில் சீர் செய்துவிட முடியாதெனவும் அங்கு அவர் மேலும் கூறினுர். (கே-இ)

---

பேராதனை பல்கலைக்கழகத்தில்

# வெளிவாரிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்ப)

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சைகளுக்கான விண்ணப்டங்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. விண்ணப்ப முடிவுத் தினம் இம்மாதம் 31ம் திகதியாகும்.

விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் 150க்கும் குறையாத வெட்டுப் புள்ளியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

கடந்த வருடம் வெளிவாரியாகப் பதிவு செய்தவர்கள் இதுவரை பரீட்சைக்குத் தோற்ருதிருந்தால். அந்தப் பரீட்சை ரத்துச் செய்ததாகக் கருதப்படும். அவர்கள் மீண்டும் தமமைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. க-இ

---

கோப்பாயில்

# உவர் நிலங்கள் விளை நிலங்களாகின்றன

[யாழ்ப்பாணம்)

எதற்கும் பயன்படாது காணப்பட்ட கோப்பாய் உப்பாற்றை அண்டிய உவர்நிலங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முயற்சியால் விளைநிலங்களாகின்றன.

சென்றகாலபோகத்தில் இப்பகுதியில் நெல்செய்கை வெற்றியளித்ததை தொடர்ந்து இம்முறை பல விவசாயிகள் இவ்வுப்பாற்றைஅண்டிய பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இக்காலபோக உவர்நில நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் 25 பேருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உவர்நிலத்தில் விளையும் ஏ. ரி. 402 இன விதை நெல் உரம் போன்றவை கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

3ம் ஆண்டுக்கு

# இவ்வாண்டு முதல் புதிய பாடத்திட்டம்

(உடுவில்)

''எல்லாப் பாடசாலைகளிலும் மூன்றும் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டம் இவ்வருடம் முதல் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்'' என வடக்குக் கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார்.

இப்புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்துவதுபற்றி கல்வி வலயங்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இப்புதியபாடத்திட்டத்தை பாடசாலைகளில் நடைமுறைபடுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவனத்தினுல் கடந்த ஆண்டில் ஆரம்பக் கல்வி ஆலோசகர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதெனவும், அவர்கள் மூலமாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குகல் வேண்டும் எனவும் இப்பயிற்சியினை நடத்துவதற்கான நிதியினை மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் இருந்து எடுக்கமுடியும் எனவும் திரு. அருளானந்தம் அறிவித்துள்ளார். (109-சி)

**மணிவாக்கு**

பொய்யினுல் ஒருவன் அடையும் ஆதாயமெல்லாம் இதுதான்: அவன் உண்மையைச் சொல்லும்போதும் எவரும் நம்பமாட்டார்கள்.

—அரிஸ்டாடில்

## நமது நோக்கு

### தாலாட்டு இரு வகையா?

ஒரு வீட்டில்—பாலைக் குடித்துவிட்டுக் குழந்தை ஆரவாரிக்கிறது. தாயோ வேறு வேலை செய்வதற்காக குழந்தையை தூங்க வைக்க முயற்சிக்கிருள்.

''தூங்கடா கண்ணே, தூங்கு! வேட்டைக்குப் போன மாமா வீட்டுக்கு வருவார் நரிக் கொம் போடு!''

தாலாட்டுப் பாடுகிருள் தாய். நரிக்கொம்பு வரும் என்ற நம்பிக்கைக் கனவோடு தூங்குகிறது குழந்தை.

இன்னொரு வீட்டில்—பசியால் அழுகிறது குழந்தை. உணவு கொடுத்துப் பசி அடக்க முடியாத செவிலித் தாயால் குழந்தையைத் தூங்கவைக்க முடியவில்லை.

''தடியோடு வருவான் மாமன்! அடியே தருவான் அழுகை தொடர்ந்தால்! தூங்கடா, பயலே, தூங்கு!''

இப்படி மிரட்டிப் பாடினுல் தூங்குமா; குழந்தை?

வீட்டிலே மாத்திரமா இந்தக் காட்சி? நாட்டிலேயும் இத்தகைய காட்சிகளைக் காணமுடிகிறதல்லவா?

உரிமைகள் இழந்து, அடக்கப்பட்ட மக்கள் பல்வேறு கொடூரங்களாற் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாடறியும்; உலகறியும்,

பாதிப்புகள் ஏன் ஏற்பட்டது என்பதை உணர்ந்து அவற்றைக்களைய நடவடிக்கைகளை எடுப்பதுதானே நியாயம்?

ஆனுல் — நடப்பது என்ன? படைகளை மேலும் உற்சாகப்படுத்தி, பாதிப்புகளைத் தொடருவோம் எனப் பயம் காட்டினுல் அச்சுறுத்தல் தாலாட்டுப் பாடினுல் தூங்கி விடுமா சமூகம்?

அது மாத்திரமல்ல— பாதிக்கப்படாத பெரும்பான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனக்கூறினுல், அரசு எத்தகைய சிந்தனையோடு செயற்படுகின்றது என்பதை மக்கள் உணரத் தவறமாட்டார்கள்.

ஏற்கனவே இழைக்கப்பட்ட கொடூரங்களாற் பாதிக்கப்பட்ட மக்களின் வேதனையைப் போக்கும் விதத்திற் செயற்படாது, அச்சுறுத்தல்கள் விடுப்பது முழுநாட்டிற்குமே பயன் தராது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்!

# பெண்ணின விடுதலை இன்றேல் சமுதாய விடுதலை இல்லை

## — மாலினி உரை

(சாவகச்சேரி)

''பெண்கள் போராட்டம் ஆண்களுக்கு எதிரானது அல்ல. ஆண்கள் பெண்களுக்கும், பெண்கள் ஆண்களுக்கும் உறுதுணையாக இருக்காவிட்டால் சமுதாயம் ஒரு நல்ல நிலையைப் பெறமுடியாது. ஆண்கள் பெண்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். பெண் நிலையில் மாற்றம் வருகின்றபொழுது அது ஆண்கள் பக்கத்திலிருந்தும் வரவேண்டும். அவ்வாறு வராவிட்டால் நாங்கள் வெற்றி பெறமுடியாது. நாங்கள் வெற்றிபெற அடிமட்டத்தில் இருந்து செயல்படவேண்டும் பெண் விடுதலை இன்றேல் ஒரு இனமோ ஒரு சமுதாயமோ விடுதலைபெற முடியாது''

இவ்வாறு அனைத்துலக மகளிர் தினம் தென்மராட்சிக் கோட்டத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபொழுது பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த மாலினி தெரிவித்தார்.

தென்மராட்சி மகளிர் அமைப்பை சேர்ந்த நாமகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாலினி தொடர்ந்து உரையாற்றுகையில்:

யுத்த நிகழ்வு எமக்குபெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் உணர்வுகளுக்கு அரசு இன்று அழுத்தம் கொடுத்துள்ளது. இந்நிலையில் அரசுக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்கவேண்டும். சமாதானம் பற்றிப் பேசும் அரசு மக்களின் அன்றாடப் பிரச்னைகளை இன்னும் தீர்க்கவில்லை. அரசால் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இன்று நாங்கள் அகதிமுகாம்களில் தங்கியிருக்கின்றோம். இந்த அரசின் அழுத்தத்தினுல் எமது மக்களுக்கு பெரும் துன்ப துயரங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று இலட்சக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் இருக்கிறார்கள். இந்தத் துன்ப துயரங்களில் பெண்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திலகவதி தமது உரையில்: பெண்கள் அடிமைகளாக வாழப் பிறந்தவர்கள் அல்ல. ஒரு ஆணுக்கு எவ்வளவு உரிமையும், ஆளுமையும், இலட்சியமும் உண்டோ அது அவ்வளவும் பெண்ணுக்கும் உண்டு இதை உணர்ந்து பெண்கள் செயல்படவேண்டும். ஒடுக்குமுறை நிலை தகர்க்கப்படவேண்டும்.

பெண் விடுதலை ஒரு சமத்துவமான உன்னதமான நிலையை பெறவேண்டும். இதை இங்கு எமது தலைவர் உருவாக்கியிருக்கின்றார்.

மகளிர் படையணியை உருவாக்கி அதை மெருகூட்டி வளர்த்தவர் அவர். மகளிர் படையணி இன்று ஒரு பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது.

பெண்களின் சாதனைகளை நீங்கள் அறியவில்லை. பெண்களால் எதையும் செய்யமுடியும். மகளிர் படையணியாக ஆரம்பித்து அரசியல் பணிகளாக, கடற் புலிகளாக, கரும்புலிகளாக மிகவும் உன்னதமான வளர்ச்சியை பெண்கள் அடைந்துள்ளார்கள். இதை யரர் செய்கின்றார்கள்? இதை எங்கள் ஈழத்தமிழ் பெண்கள் தான் செய்கின்றார் என்றார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தனது உரையில்: சங்ககாலத்தில் வீரமுள்ள தமிழ்ப் பெண் தன் சகோதரனை, தன் கணவனை, தன் மகனை போராட்டத்துக்கு அனுப்பியிருக்கின்றாள். இன்று பெண்களே நேரடியாக களத்தில் இறங்கி உரிமைப் போராட்டம் நிகழ்த்தும் அளவுக்கு தலைவர் செய்த முயற்சி இந்த நூற்றாண்டில் கணிப்பிடத்தக்கது.

இன்று போராட்ட உணர்வு விழிப்புணர்வு மிளிர்ந்து வருவதை பார்க்கின்றோம். அனைத்து பெண்களும் திரண்டு எழுந்தால் அந்த நாள் மீட்பு நாளாக அமையும் என்றார். (155-சி)

# 'லக்பிம' ஆசிரியர், பிரதி ஆசிரியர் இரகசிய பொலிஸ் விசாரணையில்

[கொழும்பு]

இரகசியப் பொலிஸார் 'லக்பிம' பிரதம ஆசிரியர், பிரதி ஆசிரியர்களிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் 19ம் திகதி வெளியான 'லக்பிம' பத்திரிகையில், ஜனாதிபதி சந்திரிகா முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. அசித பெரேராவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டதாகக் குறிப்பிடப்பட்ட அரசியல் கட்டுரை தொடர்பாகவே இரகசியப் பொலிஸார் பத்திரிகை ஆசிரியர்களை விசாரணை செய்தனர்.

அண்மைக் காலமாகப் பத்திரிகை ஆசிரியர்களை, இரகசியப் பொலிஸார் அவர்கள் எழுதும் ஜனாதிபதி தொடர்பான விடயங்களையிட்டு விசாரித்து வருவதும் தெரிந்ததே.

இதேவேளை 'லக்பிம' பத்திரிகைக்கு எதிராக, அமைச்சர் சி.வி.குணரத்ன 5கோடி ரூபா கோரி மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதும் தெரிந்ததே. கே-சி

# அரசியல் பழிவாங்கல் 25,000 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க காலத்தில் இடம் பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் சம்பந்தமாக 25,000 முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்துக்கு கிடைத்துள்ளது.

முதலில் அமைச்சர்கள் மட்டத்தில் பரிசீலிக்கப்படவிருக்கும் இந்த முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கையளிக்கும் வைபவம் நேற்று பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. -ம-சி

## இராசி பலன்

11-3-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு மாசி —27)

தசமி முழுவதும் திருவாதிரை பிற்பகல் 5-19 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 9-23 முதல் 10-53 வரை, சுபவேளை மாலை 3-23 முதல் 4-53 வரை.

மேஷம்; முயற்சிக்கு பாராட்டு, தொழில் சிறப்பு, பணவரவு.

இடபம்: கண்டனம், குடும்ப விரிசல். அலைச்சல்.

மிதுனம்: நண்பர் அனுகூலம் தெய்வீக வழிபாடு, பயணம்.

கடகம்: மனப் பதட்டம், வீண் விரயம், உடல் அசதி,

சிங்கம்: விரோதிகளை ஜெயித்தல், நண்பர் உதவி, கடன் வசூல்,

கன்னி: சுபகாரியம், அதிகாரிகள் பாராட்டு, புதிய சிந்தனை.

துலாம்: கோபவார்த்தை, சகோதரி பகை, அகால உணவு.

விருச்சிகம்: தொழில் விரோதம், துயரச்செய்தி, வைத்திய செலவு.

தனுசு; காரியசித்தி, பணியாள் அறிவுரை, குடும்ப சுகம்.

மகரம்: விருந்தினர் சந்தோஷம், சுபகாரியம், வெற்றிவாய்ப்பு.

கும்பம்; கூடிப் பேசுதல், பிரச்னைக்குத் தீர்வு, உறவினர் மகிழ்ச்சி.

மீனம்: வீண் வம்பு, பயனற்ற செயல், கெட்ட சகவாசம்.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### கல்வியும் கோளும்

ஒருவர் சாதகத்தில் இரண்டாமிடம் ஆரம்பக் கல்வியையும், நான்காம் இடம் உயர் கல்வியையும் ஒன்பதாமிடம் மேலும் பெறும் பட்டங்களையும் குறிக்குமாம்.

சந்திரன், புதன், வியாழன் ஆகியவைதான் கல்வியை நிர்ணயம் செய்யும் பிரதான கிரகங்கள். ஆனுல் ஏனையவையும் ஏதோ ஒரு விதத்தில் உதவுமாம். வித்தைக்கு அதிபதி புதன், வித்தையைப் பதியவைப்பது சந்திரன். ஒப்பிட்டு உணரும் மதி நுட்பத்தைத் தருவது வியாழன்.

ஆழமான ஆராய்ச்சிக்கு உதவுவது சனி. தக்க இடத்தில் கற்றதை எடுத்துப் பயன்படுத்தும் செயலூக்கத்தைத் தருவது செவ்வாய். விடாப்பிடியாக வித்தையைத் தொடரவைக்கவும், பல அனுபவங்களை திரட்டும் ஆற்றலைத் தருவன ராகு கேதுக்களாம்!

— மயூரன்

## வெள்ளோட்ட விழா

(அரியாலை)

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் பலஇலட்சரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சித்திர திருமஞ்சம் வெள்ளோட்ட விழா இன்று 11ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. 59

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று 11ம் திகதிசனிக்கிழமை பி. ப. 2 மணியளவில்முத்தமிழ் மன்ற மைதானத்தில் அதிபர நா. நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. ம

0 0 0

(யாழ்ப் பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 11ம் திகதி சனிக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஈ. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் கலந்துகொள்வார்.

0 0 0 0

(கொழும்புத்துறை)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப் புசங்கம் யாழ்ப்பாணக்கிளையின் விசேட கூட்டம் ஒன்று இன்று 11ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10-30 மணிக்கு யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறும். 154

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-11**

சனி இரவு

08-01 புரட்சிக்குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08 30 செய்திகள்
08-40 கவியரங்கம் ''மண்ணில் இன்பங்களை வேண்டி மாண்பினை இழப்பாரோ''

**1995-03-12**

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-11**

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினடி வினப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில வினடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்:

## தவக்கால நற்சிந்தனை

''ஆண்டவரே, உம்மைக் கூவி அழைத்த நாளில், என் மன்றாட்டைக் கேட்டருளினீர்'' (சங். 137:3அ)

இறைவனின் புனித மக்களாக நாம் இருக்கவேண்டுமாகில், அவர் திருச்சட்டங்களுக்கு நாம் அமைந்து நடக்க வேண்டும். அவரது திருச்சட்டங்கள் எம்மைப் புனித மக்களாக ஆக்குவதற்கேயன்றி வேறொன்றுக்குமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஆண்டவர் தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்.

— தா. மைதிலி

சுத்தக் காற்று சுற்றிலும் நிலவிட நித்தம் ஒரு மரம் நடுவோம்

## ராணுவத் தீர்வு சாத்தியப்படாது
# ராணுவதளபதியின்கூற்றுக்கு சிங்கள இனவாதிகள் எதிர்ப்பு!

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒருபோதும் இராணுவத்தீர்வு சாத்தியப்படாது என்று இராணுவத்தளபதிலெப். ஜெனரல் ஜெரி டி சில்வா கூறிய கூற்றுக்கு பேரினவாத சிங்களவர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக 'வெரித்தாஸ்' நேற்று தெரிவித்தது.

ஒரு நாட்டின் இராணுவத் தளபதி அரசியல் தீர்வுக்கு சாதகமாகக் கருத்து தெரிவிப்பதற்கு அவருக்கு எந்த வித அதிகாரமும் கிடையாது என்று சிங்களப் பேரினவாதிகளும் இராணுவத்தின் ஒரு பகுதியினரும், இராணுவத் தளபதியின் கூற்றுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியின் மேற்படி கூற்றை எதிர்த்து கொழும்பில் வெளியாகும் பல சிங்களப் பத்திரிகைகளும் செய்திகளையும் ஆசிரியர் தலையங்கங்களையும் எழுதி வருவதாகவும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. விரி

தமிழாராய்ச்சி
# மாநாட்டு தலைவர்
## தமிழகத்துக்கு எச்சரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் நடைபெற்ற உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வந்த இலங்கைத்தமிழ் அறிஞர்களை திருப்பி அனுப்பியதற்கு, தகுந்த காரணம் காட்டாவிட்டால், இது பற்றி தாம் ஒரு அறிக்கை வெளியிட நேரிடுமென்று உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் ஹிரோஷிமா தமிழக அரசை எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அறிஞர்களான பேராசிரியர் கா சிவத்தம்பி, பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் சண்முகதாஸ், சுவீடன் பேராசிரியர் பீட்டர் சொல்க் ஆகியோரை திருப்பி அனுப்பியதற்கு, யார் காரணம் என்பதை இதுவரை தெரிவிக்காமல் தமிழக அரசு மௌனம் சாதித்து வருகின்றது.

இதுபற்றிய சரியான பதிலை தமிழக அரசு விரைவில் தரத் தவறினால் இதுபற்றிதான் ஒரு அறிக்கையை வெளியிடப் போவதாக, உலகத் தமிழாராய்ச்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். வி-ரி

# கிழக்கு தமிழர் போர்க்கால சூழ்நிலையிலே வாழ்கிறார்கள்

(கொழும்பு)

"கிழக்கு மாகாணத் தமிழக் தொடர்ந்தும் போர்க்கால சூழ்நிலையிலேயே வாழ்கின்றார்கள். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேசசுக்கள் நடைபெற்றாலும் கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளில் எந்தவித மாறுதல்களையும் காணமுடியவில்லை,"

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் கிழக்கு மாகாண இராணுவத்தினரின் நடவடிக்கைகள் பற்றி மேலும் தெரிவிக்கையில்

முன்னைய காலத்துக்கும் போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்த இன்றைய காலத்துக்குமிடையில் கிழக்கு மாகாணத் தமிழர் எதுவித வேறுபாட்டையும் காணவில்லை. அன்றுபோல் இன்றும் அங்கு வாழும் மக்கள் இராணுவ அச்ச உணர்வுகளுடனே வாழ்கின்றார்கள். சோதனைகள் என்ற பெயரில் இராணுவ கெடுபிடிகளும் கட்டுப்பாடுகளும் தொடர்கின்றன. முன்னரைவிட இராணுவ முகாம்களும், பொலிஸ் நிலையங்களும் பலப்படுத்தப்படுகின்றன. மக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரால் துன்புறுத்தப்படுகின்றார்கள். தமிழர் வாழும் கிராமங்கள் அடிக்கடி இன்றும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்படுகின்றனர் என்றும் கூறினார் விரி

## தபால் விநியோகம்

(அரியாலை)

குமண கப்பலின் அடியில் உள்ள 291 தபால்பொதிகளும் இன்று 11-ந் திகதி சனிக்கிழமை இறக்கப்பட்டு நாளை மறுதினம் 13-ந் திகதி திங்கட்கிழமை முதல் தபால் விநியோகம் நடைபெறவுள்ளது. —59

## 505 அகதிகள் தாயகம் திரும்பினர்

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 505 பேர் நேற்றுக் காலை கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள்.

ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்குப் புறப்பட்ட இக்கப்பலில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே கூடுதலாக இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். —வி-ரி

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்[

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ச, சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறும். —இ

## மட்டக்களப்பில் படையினர் தேடுதல்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் சில இடங்களில் படையினர் தீவிர சோதனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாமாங்கம், புளியந்தீவு போன்ற பகுதிகள் அண்மையில் திடீரென படையினராலும், பொலிசாராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில நடந்த சில மாதங்களாக போர் இடை நிறுத்தம் அமுலில் இருக்கின்றபோதிலும் மட்டு. மாவட்டத்தில் படையினரின் சோதனை வழமை போல் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இப்பகுதிகளில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை -ரி

ஐ. தே. க. எம். பிக்கள் சிலர்

# அரசியல் அமைப்பு
## திருத்தத்திற்கு ஆதரவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள அரசியல் அமைப்பு திருத்தத்துக்கு ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தில் இணைவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —ம-ரி

## நோயுற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை நேற்று பரிசோதித்தார், இதேவேளை யுத்தக் கைதிகள் மிகவும் தளர்ந்த நிலையில் பேசமுடியாதவர்களாககாணப்படுகின்றனர். -ரி

## வங்கிகள் 1 மணிவரை திறந்திருக்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகள் யாவும் வாடிக்கையாளர்களின்கொடுக்கல் வாங்கலுக்காக எதிர்வரும் 15ம் திகதி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை திறந்திருக்கும் என யாழ் மாவட்ட வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

## சமாதானம்

1ம் பக்கத்தொடர்ச்சி)

எனத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கிரிய சமாதான தீர்வு ஒன்றை பலப்படுத்துவதுடன் சமாதானம் மீட்கப்பட்டவுடன் பரந்தளவில் அபிவிருத்திக்கு உதவும் தயார் நிலையை வெளிப்படுத்துதலும் தமது நல்ல நோக்கங்களாகும் எனவும் அவர் மேலும் கூறினார்.

போரினால் அழிந்துள்ள பகுதிகளை மீளக் கட்டியமைப்பதற்குரிய உதவிகளை வழங்கும் சாத்தியபாடுகள் பற்றியும் தாம் ஆராய்வர் எனவும் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் விளைவுகளைக் கணிப்பிடவும் இலங்கைத்தீவில் அரசியல் சூழ்நிலைகளை அறியவும் முடியும் என எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். —ரி

## எரிபொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ சிப்பாயினதும் உயிரை காப்பாற்றலாம் என்றும் இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் அக் கடிதத்தில் கோரியுள்ளனர்.

ஆறு பிரதி அமைச்சர்கள் உட்பட 23 பேர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள்.

பிரதிஅமைச்சர் பி. சந்திரசேகரன், டாக்டர் ஐ. எல். எம். இலியாஸ் எம். பி. ஆகியோரும் கடிதத்தில் இக் கையெழுத்திட்டுள்ளனர்.

வடபகுதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எந்த வகையிலும் ரிபொருள் தட்டுப்பாடு இல்லை. ஆனால் எரிபொருள் பிரச்னையை தீர்ப்பதன் மூலம் அப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கையை வழமைக்கு கொண்டுவர முடியும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## வெலிக்கடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிலுள்ள ஏழு பொலிஸ் நிலையங்களிலிருந்து பெருந்தொகையான பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து கண்ணீர் பிரயோகம், குண்டாந்தடி தாக்குதல் நடத்தினார்கள். நிலைமை மோசமாகவே துப்பாக்கி பிரயோகமும் செய்தார்கள்.

இச்சம்பவத்தில் 15 கைதிகளும் 14 சிறைக்காவலர்களும் காயமடைந்தனர். இருசிறைச்சாலைகளினதும் பாதுகாப்பு தற்போது ராணுவத்திடம ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தனிநபர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ரி

ஆங்கில ஆசிரியர்

# குறைபாடுகள் சீர் செய்யப்பட்டன

[உடுவில்]

உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இவ்வருடம் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர்களின் குறைபாடுகள், உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசாவினால் தீர்த்து வைக்கப்பட்டன.

இவ்வாசிரியர்களின் உடல் நலம், போக்குவரத்து மற்றும் பல பிரச்னைகளையிட்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கல்விக் கோட்டத்திற்கு அழைத்துக் கேட்டு அறிந்துகொண்டார்.

அதன் பின்னர் ஆசிரியர்களுக்குப் பொருத்தமானதும், அவர்கள் விரும்பிய பாடசாலைகளில் அவர்களுக்கு நியமனங்களை வழங்கிக் குறைபாடுகள் சீர்செய்யப்பட்டன. -109

## சிறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை,

இதனை கண்டித்தும் தமது பாதுகாப்பை வலியுறுத்தியும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ரி

## நோர்வே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைகள் நடாத்தும்.

இத் தூதுக்குழு ஜனதிபதியின் செயலாளர் திரு. பால பத்தபெண்டி, நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சா லஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் அரசிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிலது.

இத் தூதுக் குழுவில் நோர்வே அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அஸ்சின் மத்தீஸன், ஆசிய லத்தீன் அமெரிக்க பிரிவுக் தலைவர் ஜ்ஸ்லனேன்மேரிசகா, நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சான நோராட்டைச் சேர்ந்த [illegible]மீற்றபாவுக் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கொழும்பிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், ஐ. நாவின் அபிபிருத்தி திட்ட பிரிவான யு. என், டி. பி. அதிகாரிகள் ஆகியோர்களையும் நோர்வே தூதுக்குவினர் சந்தித்து பேசுவர் எனவும் தெரியவருகிறது.

## தொழில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது கல்விச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களுடன் வருதல் வேண்டும்.

இப் பதிவு நடைமுறையானது தமிழீழ நிர்வாக சேவையினரின் மானிட மூல அபிவிருத்திப் பிரிவில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை நடைபெறும். -ரி

## உண்ணாவிரதிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ம்பு வந்துள்ள போர்க்கைதிகளின் பெற்றோரும் தமது பிள்ளைகளை விடுவிப்பதற்கு உதவும்படி அரச உயரதிகாரிகள், மதத் தலைவர்கள், சர்வதேசசெஞ்சிலுவைசசங்க பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து உருக்கமான வேண்டுகோளை விடுத்துளளார்.

நேற்று பிற்பகல் இந்த பெற்றோர் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவை சந்திக்க வந்திருந்தனர். இ

## அகதிகளை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் அகதிகள் பொருளாதார நிலைகாரணமாகவபேரிட்டனில் தஞ்சமடைந்துள்ளனர் என்ற காரணத்தாலே இவர்கள் திருப்பி அனுப்பப்பட இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதிகளின் விண்ணப்பங்களை பரிசிலித்து வரும் குழுவினர் தமிழ் அகதிகளில அநேகமானவரின் விண்ணப்பங்களை நிராகரித்து வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. —ம-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/16330/78